உ

முருகன்றுணை.

நற்கீரதேவர் அருளிச்செய்த

# திருமுருகாற்றுப்படை

மூலபாடம்.

29, VITHIYANATHA MUDALY ST. MADRAS

சென்னை: மநோன்மணிவிலாச
அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது.

1910.

இதன்விலை பை—6.

உ

முருகன்றுணை.

# பிரபந்தவரலாறு.

இப்பூமண்டலத்தின்கண்ணே மேன்மைபெற்ற பாண்டிவள நாட்டுக்குத் திலகமாகி வைகைநதிசூழ்ந்து சிறப்புற்றோங்கியிராநின்றமதுராபுரியிலே தெய்வத்தன்மை விளங்கியிருந்த கடைச்சங்கத்துப் புலவர்களுட் சிறந்த மகாவித்துவானாகியும்மதுரைகணக்காயனார் குமாரனாகியுமிருந்த தெய்வப்புலமை வகித்த நற்கீரதேவரென்பவர் தனக்கு பரமசிவனால் நேரிட்ட சாபநிவர்த்திக்காகஇமயமலைக்கருகிற் செல்லும்போதுஒருதடாகத்தில் நீராடி தண்ணீர்க்குச் சமீபத்திலுள்ள ஆலவிருட்சநீழலில் சிவபூசை செய்துகொண்டிருக்கையில், அவ் வாலமரத்திலிருந்து பழுப்பொன்று நற்கீரதேவருக்குமுன்னே பாதிநீரிலும், பாதி நீர்ப்புறத்திலுமாக விழுந்தது. நீரிற்படிந்தபாதிபழுப்புமீன்வடிவும், நீர்ப்புறத்துத்தங்கிய பாதி பழுப்புபறவைவடிவும்

அடைந்து, மீன் பறவையையும்பறவை மீனையும் இழுக்க,நக்கீரதேவர் அவ்வாச்சரியமான செய்கையிலேதங்கருத்தைச் சற்று செலுத்த,அதனாற்சிவபூசைக்குத் தவறுதலுண்டாயிற்று.

அதுநிற்க, அதன்முன்பு அவ்விடத்து அப்படியே சிவபூசையில் வழுவினவர்களாகிய தொளாயிரத்துத் தொண்ணூற்றொன்பதின்மர்களை ஒருமலைக்குகையில் அடைத்து, இன்னும் ஒருவன் வேண்டுமெனக் காத்திருந்த கற்கிமுகி என்னும் பூதமானது நக்கீரரை எடுத்துப்போய் அக்குகையில்அடைத்து ஆயிரவராக்கித் தன்னியமப்படி அகப்பட்ட அவ் வாயிரவரையும் உண்ணும்படிக்கு நீராடப் போயிற்று.

முன்னடைபட்டிருந்த முனிவர்களெல்லாம் நக்கீரதேவரைப்பார்த்து "யாங்களெல்லாம்நெடுங்காலமாக இப்பூதத்தின்சிறையில்அகப்பட்டிருந்தும், இப்பூதத்தாலேஉணவுமுதலியவைகளைப் பெற்

றுப் பிழைத்திருந்தோமே இன்றைக்கு உம்மாலே இப்பூதத்துக்கு இரையாகுங் காலம்சமீபித்தது" என்று அழுதார்கள் அதுகண்டு நக்கீரதேவர் மனமிரங்கி, ஸ்ரீமுருகக்கடவுளைக்குறித்துத் திருமுருகாற்றுப்படை என்கிறபிரபந்தத்தைப் பாடினார். உடனே ஸ்ரீமுருகக்கடவுள் எதிர்வந்து அவருக்குவந்த இடரைத் தெரிந்துகொண்டு தமது திருக்கரத்தினிடத் தாங்கியிராநின்ற கதிர்வடிவேலை விட்டு அப்பூதத்தைச் சம்ஹரித்து அவ்வாபத்தை நீக்கி அவர்களை யெல்லாஞ் சிறையினின்றும் விடுவித்துபாதுகாத்து இரட்சித்தருளியபின், நக்கீரதேவரைப் பார்த்து "இப்பிரபந்தத்தைப் பிரதி தினம் உள்ளன்புடன் துதிசெய்பவர்களுக்குவேண்டியவரங்களைக்கொடுத்து வருவோமாக என்று திருவாக்குத் தந்தருளி அவரவர்களுக்குத்தக்க வரங்களுங்கொடுத்து மறைந்தனர்.

இந்த லீலை திருப்பரங் குன்றத்து சரவணப்பொய்கையில் நடந்ததாகவும் ஆயிரவரைச் சிறையில் வைத்திருந்தது திருப்பரங்குன்றத்து மலைக்குகையிலென்றும் சொல்கின்றனர். அதற்கியைய இப்போதும் ஸ்ரீமுருகக்கடவுள் நற்கீரனைரைச் சிறைமீட்டருளிய இந்த லீலையை ஒவ்வொரு வருடத்தும் திருப்பரங்குன்றத்தில் பங்குனிமாதத்தில்நடக்கும்உற்சவகாலத்து நான்காந்திருநாளில் மகா வைபவத்துடன் நடந்து வருகின்றது; இதுவன்றி, திருப்பரங்குன்றத்துமலையினுச்சியிலுள்ள ஒருபெரிய கற்பாறையின் கீழிருந்த குகையில் ஆயிரவரை அடைத்துவைத்திருந்ததாகவும், அதை வேலாயுதத்தால் பிளந்து அவர்களை வெளியாக்கினரென்றும் சொல்வதற்கிணங்க அப்பாறை இருகூறுகப் பிளந்திருப்பதை இன்றைக்குங் காணலாம்.

பிரபந்தவரலாறு முற்றிற்று.



உ

முருகன்றுணை.

# திருமுருகாற்றுப்படை.

ஒருமுருகாவென்றென் னுள்ளங்குளி ரவுவந்துடனே, வருமுருகாவென்றுவா ய்வெருவா நிற்பக்கையிங்ஙனே, தருமு

ருகாவென்று தான்புலம்பாநிற்பத் தை
யன்முன்னே, திருமுருகாற்றுப் படை
யுடனேவருஞ் சேவகனே.

---

## க. திருப்பரங்குன்றம்.

### இணைக்குறளாசிரியப்பா.

உலக முவப்ப வலனேர்பு திரிதரு, ப
லர்புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங், கோ
வறவி மைக்குஞ் சேண்விளங்கவிரொளி,
யுறுநர்த் தாங்கிய மதனுடை நோன்ரு
ட், செறுநர்த் தேய்த்த செல்லுறழ்தடக்
கை, மறுவில் கற்பின் வாணுதல்கணவ
ன், கார்கோண் முகந்த கமஞ்சூன்மாம
ழை, வாள்போழ் விசும்பின் வள்ளுறை
சிதறித், தலைப்பெய றலைஇய தண்ணறு
ங்கானத், திருள்படப் பொதுளிய பரா
ரைமராஅத், துருள்பூந் தண்டார்புரளு
மார்பினன், மால்வரை நிவந்த சேணு
யர் வெற்பிற், கிண்கிணிகவைஇய வொ

ண்செஞ் சீறடிக், கணைக்கால் வாங்கிய
நுசுப்பிற் பணைத்தோட், கோபத்தன்ன
தோயாப்பூந்துகிற், பல்காசு நிரைத்த சி
ல்காழல்குற், கைபுனைந்தியற்றாக் கவின்
பெறுவனப்பி, னாவலொடுபெயரியபொ
லம்புனை யவிரிழைச், சேணிகந்துவிளங்
குஞ்செயிர்தீர்மேனித், துணையோ ராய்
ந்தவிணையீரோதிச், செங்கால் வெட்சிச்
சீறித ழிடையிடுபு, பைந்தாட் குவளைத்
தூவிதழ்கிள்ளித், தெய்வ வுத்தியொடு
வலம்புரி வயின்வைத்துத், திலகந் தை
இய தேங்கமழ் திருநுதன், மகரப் பகு
வாய் தாழமண் ணுறுத்துத், துவர மு
டித்த துகளறுமுச்சிப், பெருந்தண் சண்
பகஞ்செரீஇக்கருந்தகட், டுளைப்பூமருதி
னொள்ளிணரட்டிக், கிளைக்கவின் றெழு
தரு கீழ்நீர்ச் செவ்வரும், பிணைப்புறுபி
ணையல் வளைஇத்துணைத்தக, வண்காது
நிறைந்த பிண்டியொண்டளிர், நுண்பூ

ணாகந் திளைப்பத் திண்காழ் நறுங்குற
டிரிஞ்சிய பூங்கேழ்த் தேய்வை, தேங்க
மழ் மருதிணர் கடுப்பக்கோங்கின், குவி
முகிழிளமுலைக் கொட்டிவிரிமலர், வே
ங்கை நுண்டா தப்பிக்காண்வர, வெள்
ளிற் குறுமுறிகிள்ளுபுதெறியாக், கோ
ழி யோங்கிய*வென்றடு விறற்கொடி,
வாழிய பெரிதென் றேத்திப் பலருடன்,
சீர்திகழ்சிலம்பகஞ் சிலம்பப்பாடிச், சூ
ரர மகளிராடுஞ் சோலை, மந்தியு மறி
யா மரன்பயி லடுக்கத்துச், சுரும்புமூ
சாச் சுடர்ப்பூங் காந்தட், பெருந்தண்
கண்ணிமிலைந்த சென்னியன், பார்முதிர்
பனிக்கடல் கலங்கவுள்புக்குச், சூர்முத
றடிந்த சுடரிலை நெடுவே, லுலறிய கது
ப்பிற் பிறழ்பற் பேழ்வாய்ச், சுழல்விழி
ப்பசுங்கட்சூர்த்தநோக்கிற், கழல்கட் கூ
கையொடுகடும்பாம்பு தூங்கப், பெருமு
லை யலைக்குங்காதிற் பிணர்மோட், டுரு

* ஏன்றடுவிறலென்றும் பாடம்.

கெழுசெலவி னஞ்சுவருபேய்மகள், குரு
தி யாடிய கூருகிர்க் கொடுவிரற், கண்
டொட் டுண்டகழி முடைக்க ருந்தலை,
யொண்டொடித் தடக்கையினேந்திவெ
ருவர, §வேன்றடு விறற்களம் பாடித்
தோள்பெயரா, நிணந்தின் வாயடுணங்
கைதூங்க, விருபேருருவினொருபேரியா
க்கை, யறுவே றுவகையி னஞ்சுவர ம
ண்டி, யவுணர் நல்வல மடங்கக் கவிழி
ணர், மாமுத றடிந்த மறுவில் கொற்
றத், தெய்யாநல்லிசைச் செவ்வேற் சே
எய், சேவடி படருஞ் செம்ம லுள்ள
மொடு, நலம்புரிகொள்கைப்புலம்‡பிரி
ந்துறையுஞ், செலவுநீ நயந்தனையாயிற்
பலவுட, னன்னர் நெஞ்சத்தின் *னசை
வாய்ப்ப, வின்னே பெறுதிநீ முன்னிய
வினையே, செருப்புகன் றெடுத்த சேணு

§ என்றடு என்றும் பாடம்.
‡ புரிந்துறையுமென்றும் பாடம்.
* இன்னிசையென்றும் பாடம்.

யர் நெடுங்கொடி, வரிப்புனை பந்தொடு
பாவை தூங்கப், பொருநர்த் தேய்த்த
போரருவாயிற், றிருவீற்றிருந்த தீதுதீர
நியமத்து, மாடமலி மறுகிற்கூடற் குட
வயி, னிருஞ்சேற்றகல்வயல் விரிந்துவா
யவிழ்ந்த, முட்டாட் டாமரைத் துஞ்சி
வைகறைக், கட்கமழ் நெய்தலூதி யெற்
படக், கண்போன் மலர்ந்த காமர்சுனை
மல, ரஞ்சிறைவண்டினரிக்கணமொலி
க்குங், குன்றமர்ந் துறைதலு முரியன்
அதாஅன்று.

---

## ௨. திருச்சீரலைவாய்.

வைந்நுதிபொருதவடுவாழ்வரிநுதல்,
வாடாமாலையோடையொடுதுயல்வரப்,
படுமணியிரட்டுமருங்கிற்கடுநடைக், கூ
ற்றத் தன்னமாற்றரு மொய்ம்பிற், கா
ல்கிளர்ந் தன்ன வேழ மேல்கொண்,

டைவேறுருவிற் செய்வினைமுற்றிய, மு
டியொடு விளங்கிய முரண்மிகு திரும
ணி, மின்னுற ழிமைப்பிற் சென்னிப்
பொற்ப, நகைதாழ்பு துயல்வருஉம் வ
கையமை பொலங்குழை, சேண்விளங்
கியற்கைவாண் மதிகவைஇ, யகலாமீனி
னவிர்வன விமைப்பத், தாவில்கொள்
கைத்தந் தொழின்முடிமார், மனனேர்
பெழுதரு வாணிற முகனே, மாயிருண்
ஞால மறுவின்றிவிளங்கப், பல்கதிர்வி
ரிந்தன் றொருமுகமொருமுக, மார்வல
ரேத்தவமர்ந்தினிதொழுகிக், காதலினு
வந்து வரங்கொடுத்தன்றே யொருமுக,
மந்திரவிதியின் மரபுளி வழாஅ, வந்த
ணர்வேள்வியோர்க்கும்மேயொருமுக,
மெஞ்சிய பொருள்களை யேமுறநாடித்,
திங்கள் போலத் திசைவிளக்கும்மே
யொருமுகஞ், செறுநர்த் தேய்த்துச்செ
ல்சமமுருக்கிக், கறுவுகொணெஞ்சமொ

டுகளம்வேட்டன்றேயொருமுகங், குற
வர்மடமகள்கொடிபோனுசுப்பின்,மட
வரல் வள்ளியொடு நகையமர்ந்தன்றே
யாங்கம், மூவிரு முகனு முறைநவின்
றொழுகலி, னாரந்தாழ்ந்த வம்பகட்டுமா
ர்பிற், செம்பொறிவாங்கியமொய்ம்பிற்
சுடர்விடுபு, வண்புகழ்நிறைந்து வசிந்து
வாங்குநிமிர்தோள், விண்செலன் மர
பி னையர்க்கேந்திய தொருகை, யுக்கஞ்
சேர்த்திய தொருகை, நலம்பெறு கலி
ங்கத்துக குறங்கின் மிசை, யசைஇய
தொருகை, யங்குசங் கடாவவொருகை
யிருகை, யையிரு வட்டமொடெஃகுவ
லந்திரிப்பவொருகை, மார்பொடு விள
ங்க வொருகை, தாரொடுபொலியவொ
ருகை, கீழ்வீழ் தொடியொடு மீமிசைக்
கொட்பவொருகை, பாடின்படுமணி யி
ரட்டவொருகை, நீனிற விசும்பின் மலி
துளிபொழிய வொருகை, வானரமகளி

ர்க்குவதுவை சூட்டவாங்கப், பன்னிரு
கையும் பாற்பட வியற்றி, யந்தரப் பல்
லியங் கறங்கத் திண்காழ், வயிரெழுந்
திசைப்ப வால்வளை ஞரல, வுரந்தலைக்
கொண்டவுருமிடிமுரசமொடு, பல்பொ
றி மஞ்ஞை வெல்கொடி யகவ, விசும்
பாறாக விரைசெலன் முன்னி, யுலகம்
புகழ்ந்த வோங்குயர்விழுச்சீ, ரலைவாச்
சேற லுநிலைஇயபண்பே அதா அன்று.

---

## ரு. திருவாவினன்குடி.

சீரை தைஇய வுடுக்கையர் சீரொடு,
வலம்புரிபுரையும் வானரைமுடியினர்,
மாசறவிமைக்கு முருவினர்மானி, னு
ரிவைதைஇய வூன்கெடுமார்பி, னென்
பெழுந்தியங்கு மியாக்கையர் நன்பகற்,
பலவுடன் கழிந்த வுண்டிய ரிகலொடு,

செற்றநீக்கிய மனத்தினரியாவதுங், கற்
றோரறியாவறிவினர்கற்றோர்க்குத், தா
ம்வரம்பாகிய தலைமையர் காமமொடு,
கடுஞ்சினங்கடிந்த காட்சியரிடும்பை, யா
வதுமறியா வியல்பினர்மேவரத், துனி
யில்காட்சி முனிவர்முற்புகப், புகைமு
கந்தன்ன மாசிறாவுடை, முகைவாயவி
ழ்ந்த தகைசூ ழாகத்துச், செவிநேர்பு
வைத்த செய்வுறு திவவி, னல்லியாழ்
நவின்ற நயனுடை நெஞ்சின், மென்
மொழி மேவல ரின்னரம்புளர, நோ
யின் றியன்ற யாக்கையர்மாவி, னவிர்
தளிர் புரையுமேனி யரவிர்தொறும்,
பொன்னுரை கடுக்குந்தி தலைய ரின்ன
கைப், பருமந்தாங்கிய பணிந்தேந் தல்
குன், மாசின்மகளிரொடுமறுவின் றிவி
ளங்கக், கடுவோடொடுங்கிய தூம்புடை.
வாலெயிற், றழலெனவுயிர்க்கு மஞ்ச
வருகடுந்திறற், பாம்புபடப் புடைக்கும்
பல்வரிக்கொடுஞ்சிறைப், புள்ளணிநீள்

கொடிச் செல்வனும் வெள்ளேறு, வல
வயி னுயரிய பலர்புகழ் திணிதோ, ளு
மையமர்ந்து விளங்கு மிமையா முக்க
ண், மூவெயின் முருக்கிய முரண்மிகு
செல்வனு, நூற்றுப்பத்தடுக்கிய நாட்ட
த்து நூறுபல், வேள்விமுற்றிய வென்ற
டுகொற்றத், தீரிரண்டேந்திய மருப்பி
னெழினடைத், தாழ்பெருந் தடக்கையு
யர்த்த யானை, யெருத்த மேறிய திருக்
கிளர்செல்வனு, நாற்பெருந் தெய்வத்து
நன்னகர்நிலைஇய, வுலகங்காக்குமொன்
றுபுரி கொள்கைப், பலர்புகழ் மூவருந்
தலைவராக, வேமுறு ஞாலந் தன்னிற்
றோன்றித், தாமரை பயந்ததாவிலூழி,
நான்முகவொருவற் சுட்டிக்காண்வரப்,
பகலிற் றோன்று மிகலில் காட்சி, நால்
வே றியற்கைப் பதினொரு மூவரோ,
டொன்பதிற் றிரட்டியுயர் நிலைபெறீஇ
யர், மீன்பூத் தன்ன தோன்றலர்மீன்
சேர்பு, வளிகிளர்ந்தன்ன செலவினர்

வளியிடைத், தீயெழுந் தன்ன திறலி
னர் தீப்பட, வுருமிடித் தன்ன குரலி
னர் விழுமிய, வுறுகுறை மருங்கிற்றம்
பெருமுறை கொண்மா, ரந்தரக்கொட்
பினர் வந்துடன் காணத், தாவில் கொ
ள்கை மடந்தையொடுசின்னா, ளாவின
ன்குடி யசைதலுமுரியன் அதாஅன்று

---

## ௪. திருவேரகம்.

இருமூன்றெய்திய வியல்பினின்வழாஅ,
திருவர்ச் சுட்டிய பல்வேறு தொல்குடி,
யறுநான் கிரட்டியிளமை நல்லியாண்,
டாறினிற்கழிப்பியவறனவில்கொள்கை
மூன்றுவகைக்குறித்த முத்தீச்செல்வத்,
திருபிறப் பாளர் பொழுதரிந்து நுவல,
வொன்பது கொண்ட மூன்றுபுரி நுண்
ஞாண், புலராக் காழகம் புலர வுடீஇ,

யுச்சிக் கூப்பிய கையினர்தற்புகழ்ந்,
தாறெழுத் தடக்கியவருமறைக்கேள்வி,
நாவியன் மருங்கி நவிலப் பாடி, விரை
யுறு நறுமல ரேந்திப் பெரிதுவந், தேர
கத் துறைதலுமுரியன் அதா அன்று

---

## ௫. குன்றுதோறாடல்.

பைங்கொடிநறைக்காயிடையிடுபுவேல,
னம்பொதிப் புட்டில் விரைஇக்குளவி
யொடு, வெண்கூதாளந்தொடுத்த கண்
ணிய, னறுஞ்சாந் தணிந்த கேழ்கிளர்
மார்பிற், கொடுந்தொழில் வல்விற்கொ
லைஇய கானவர், நீடமை விளைந்ததேக்
கட்டேறற், குன்றகச்சிறு குடிக்கிளையுட
ன்மகிழ்ந்து, தொண்டகச் சிறுபறைக்
குரவை யயர, விரலுளர்ப்பவிழ்ந்தவே
றுபடுநறுங்காற், குண்டுசுனைபூத்தவண்
டுபடு கண்ணி, யிணைத்த கோதையணை
த்தகூந்தன், முடித்தகுல்லையிலையுடை
நறும்பூச், செங்கான்மராஅத்தவாலிணர்

ரிடையிடுபு, சுரும்புணத் தொடுத்த பெ
ருந்தண் மாத்தழை, திருந்துகா ழல்கு
திளைப்ப வுடீஇ, மயில்கண் டன்னமட
நடைமகளிரொடு, செய்யன் சிவந்தவா
டையன் செவ்வரைச், செயலைத் தண்ட
ளிர் துயல்வருங்காதினன், கச்சினன்கழ
லினன் செச்சைக்கண்ணியன், குழலன்
கோட்டன் குறும்பல்லியத்தன், தகரன்
மஞ்ஞையன் புகரில்சேவலங், கொடிய
னெடியன் றொடியணிதோளன், நரம்பா
ர்த் தன்ன வின்குரற் றொகுதியொடு,
குறும்பொறிக் கொண்ட நறுந்தண்சா
யன், மருங்கிற்கட்டிய நிலனேர்பு துகி
லினன், முழவுறழ் தடக்கையி னியல
வேந்தி, மென்றோட் பல்பிணை தழீஇத்
தலைதந்து, குன்றுதோ றாடலு நின்ற
தன் பண்பே அதாஅன்று.

## ௬. பழமுதிர்சோலை.

சிறுதினை மலரொடு விரைஇமறியறு
த்து,வாரணக்கொடியொடுவயிற்படநிறீ
இ, யூரூர் கொண்டசீர்கெழு விழவினு,
மார்வல ரேத்தமேவரு நிலையினும்,வே
லன் றைஇயவெறியயர்களனுங்,காடுங்
காவுங் கவின்பெறு துருத்தியும், யாறுங்
குளனும்வேறுபல்வைப்புஞ், சதுக்கமு
ஞ்சந்தியும் புதுப்பூங் கடம்பு, மன்ற
மும் பொதியினுங் கந்துடை நிலை
யினு, மாண்டலைக் கொடியொடு ம
ண்ணி யமைவர, நெய்யோ டை
யவி யப்பிஐ துரைத்துக், குட
ந்தம் பட்டுக் கொழுமலர்சிதறி, முரண்
கொ ளுருவி னிரண்டுடனுடீஇச், செந்
நூல் யாத்து வெண்பொரி சிதறி, மத
வலிநிலை இயமாத்தாட் கொழுவிடைக்;
குருதியொடு விரைஇய தூவெள்ளரிசி,
சில்பலிச் செய்து பல்பிறப் பிரீஇச், சிறு
பசு மஞ்சளொடுநறுவிரை தெளித்துப்,

பெருந்தண் கணவீர நறுந்தண் மாலை,
துணையுற வறுத்துத் தூங்கநாற்றி, நளி
மலைச் சிலம்பி னன்னகர் வாழ்த்தி,நறு
ம்புகை யெடுத்துக் குறிஞ்சி பாடி, யிமி
ழிசை யருவியோ டின்னியங் கறங்க,
வுருவப் பல்பூத் தூஉய் வெருவரக்;குரு
திச் செந்தினை பரப்பிக்குறமகண்,முரு
கிய நிறுத்து முரணின ருட்க, முருகாற்
றுப் படுத்த வுருகெழு வியனக, ராடுக
ளஞ் சிலம்பப் பாடிப் பலவுடன் ,கோடு
வாய் வைத்துக் கொடுமணி யிய
க்கி, யோடாப் பூட்கைப் பிணிமுகம்
வாழ்த்தி, வேண்டுநர் வேண்டியாங்
கெய்தினர் வழிபட, வாண்டாண் டு
றைதலு மறிந்தவாறே, யாண்டாண்
டாயினு மாகக் காண்டக, முந்துநீகண்
டுழி முகனமர்ந் தேத்திக், கைதொழூ
உப் பரவிக் காலுறவணங்கி, நெடும்பெ
ருஞ்சிமயத்துநீலப்பைஞ்சுனை, யைவரு

ளொருவ னங்கை யேற்ப, வறுவர் பய
ந்த வாறமர் செல்வ, வால்கெழுகடவுட்
புதல்வ மால்வரை, மலைமகண்மகனே
மாற்றோர் கூற்றே, வெற்றி வேல்போ
ர்க் கொற்றவை சிறுவ, விழையணிசிற
ப்பிற் பழையோள் குழவி, வானோர்
வணங்குவிற்றானைத்தலைவ,மாலைமார்ப
நூலறிபுலவ, செருவி லொருவ பொரு
விறன்மள்ள, வந்தணர்வெறுக்கை யறி
ந்தோர் சொன்மலை, மங்கையர் கணவ
மைந்தரேறே, வேல்கெழு தடக்கைச்
சால்பெருஞ் செல்வ, குன்றங் கொன்ற
குன்றாக் கொற்றத்து, விண்பொரு நெ
டுவரைக் குறிஞ்சிக்கிழவ, பலர்புகழ்நன்
மொழிப் புலவ ரேறே, யரும்பெறன்
மரபிற் பெரும்பெயர்முருக, நசையுந
ர்க் கார்த்த மிசைபே ராளா, வலந்தோ
ர்க் களிக்கும் பொலம்பூட்சேஎய், மண்
டமர் கடந்தநின் வென்றாடு கலத்துப்,

பரிசிலர்த் தாங்கு முருகெழு நெடுவே
ள், பெரியோ ரேத்தும் பெரும்பெயரிய
வுள், சூர்மருங் கறுத்த மொய்ம்பி
ன் மதவலி, போர்மிகு பொருந குரி
சி லெனப்பல, யானறி யளவையி
னேத்தியா னாது, நின்னளந் தறிதன்
மன்னுயிர்க் கருமையி, னின்னடி
யுள்ளி வந்தனெ னின்னொடு, புரைகுந
ரில்லாப்புலமையோயெனக், குறித்தது
மொழியா வளவையிற் குறித்துடன்,
வேறுபல் லுருவிற் குறும்பல்கூளியர்,
சாறயர் களத்து வீறுபெறத் தோன்றி,
யளியன் றானே முதுவாயிரவலன், வந்
தோன்பெருமநின் வண்புகழ்நயந்தென,
வினியவு நல்லவு நனிபல வேத்தித்,தெ
ய்வஞ் சான்றதிறல்விளங் குருவின்,வா
ன்றோய் நிவப்பிற்றான்வந்தெய்தி, யண
ங்குசா லுயர்நிலைதழீஇப்பண்டைத்தன்,

மணங்கமழ் தெய்வத் திளநலங்காட்டி,
யஞ்சலோம்புமதியறிவனின்வரவென,
வன்புடை நன்மொழியளைஇ விளிவின்,
றிருணிற முந்நீர்வளைஇயவுலகத், தொ
ருநீ யாகித் தோன்ற விழுமிய, பெறல
ரும் பரிசி னல்குமதி பலவுடன், வேறு
பஃ றுகிலி னுடங்கி யகில் சுமந், தார
முழுமுத லுருட்டிவேரற், பூவுடையல
ங்குசினை புலம்பவேர் கீண்டு, விண்
பொரு நெடுவரைப் பரிதியிற்றொடுத்த,
தண்கமழ் மலரிறால்சிதையநன்பல,வா
சினிமுதுசுளை கலாவமீமிசை, நாகநறு
மலருதிரயூகமொடு, மாமுக முசுக்கலை
பனிப்பப் பூநுத, விரும்பிடி குளிர்ப்ப
வீசிப் பெருங் களிற்று, முத்துடைவான்
கோடு தழீஇத்தத் துற்று, நன்பொன்
மணிநிறங்கிளரப் பொன் கொழியா,
வாழை முழுமுத றுமியத்தாழை, யிள
நீர்விழுக்குலை யுதிரத் தாக்கிக், கறிக்
கொடிக்கருந்துணர் சாயப்பொறிப்புற,

மடநடைமஞ்ஞை பலவுடன் வெரீஇக்,
கோழி வயப்பெடையிரியக் கேழலோ,
டிரும்பனை வெளிற்றின் புன்சா யன்ன,
குரூஉமயி ரியாக்கைக் குடாவடி யுளிய
ம், பெருங்கல் விடரளைச்செறி யக்கருங்
கோட், டாமா நல்லேறு சிலைப்பச் சே
ணின், றிழுமென விழிதரு மருவிப்,
பழமுதிர் சோலை மலைகிழ வோனே.

## திருமுருகாற்றுப்படை.

முற்றிற்று.

---

உ

முருகன் றுணை.

# ஆறுபடைவீடுகளின் சிறப்பு.

நற்கீரருக்கும் அவரைப்போல்வாராய தொளாயிரத்துத் தொண்ணூற் றொன்பதின்மருக்கும் நேரிட்ட ஆபத்தை ஸ்ரீசுப்பிரமணியசுவாமிகள் நிவர்த்திக்க இந்தநூல் காரணமாதலினாலும்; இதனை உள்ளன்புடன் மனமுருகி பிரதி தினம் பாராயணஞ் செய்பவருக்குச் சகலபேறுந் தருவதாக ஸ்ரீசுப்பிரமணியசுவாமிகள் வாக்குக்கொடுத் திருப்பதாலும்; ஸ்ரீசுப்பிரமணியசுவாமிகள் சகல அண்டபிண்ட சராசரப்பொருள்களிலும் அந்தரியாமியாய் வீற்றிருப்பினும் இந்நூலிற் சொல்லியிருக்குந்தலங்களிற்றங்கி அநேகதேவர்கள், சித்தர்கள், முனிவர்கள், ரிஷிகள், மானிடர்விலங்குகள் முதலானவர்களுக்கு விசேடபேறுகளைத்தந்திருப்பதினாலும்; இனியும்யாவரேனும்கரும்பை நுனியினின்றுவேர்புறந்தின்றுகொண்டுபோவதொப்ப ஸ்ரீ

சுப்பிரமணியசுவாமிகளுடையபேரைச் சொல்லுதல், புகழ்தல்,பிறரால் அவற்றைக்கேட்டல், திரு ப்பணி செய்தல். கோயில்வலம்வரல், தொழல். உள்ளத்தினுன்னல், துதித்தல். தியானித்தல், நிஷ்காமியத்தவஞ்செய்தல். அவரேமானிடச் சட்டைதாங்கி குருவடிவாகிவந்து உபதேசித்தருளப்பெறல். பத்தி சிரத்தையோடு அவ்வழியினின்று சமாதிகூடி முத்தியடைதல் முதலியபேறுகளை வரிசைக்கிரமமாகஅடைவது திண்ணமாதலாலும்இந்தநூலேயும் இதிற்கூறியிருக்குந் தலங்களையும்நாம்பரிவுடன்சவனிப்பது அவசியமே:—

---

## * திருப்பரங்குன்றம்.

### நூல்தொகுப்பு.

படைத்தற்கும், காத்தற்கும், அழித்தற்கும் உரிமையுடைய ஒளியினையும்,

---

* இஃது மதுரைக்கு ௩-நாழிகைவழி தூரத்தி லிருக்கின்றது.

தாளினையும், கையினையுமுடையதெய்வ யானையார் கணவன், குளிர்ந்த கடப்ப மாலை அசையாநின்றமார்பினையுடைய வன், செங்காந்தட் கண்ணியைச்சூடிய திருமுடியுடையவன், வெற்றியும்புகழு

இஃது ஸ்ரீசுப்பிரமணிய சுவாமிகள் பராசரர் புத்திரர்களைக் காத்தருளிய தலம். ஸ்ரீசுப்பிரமணியசுவாமிகள் சூராதியரைவென்று, தேவர்கள் சிறையை மீட்டு, அவர்களை விண்ணுலகத்திற்குடியேற்றியபோது, தேவேந்திரன் இவர் பராக்கிரமத்துக்கு மகிழ்ந்துதன் புத்திரியாகியதெய்வயானையம்மையை அவருக்குப் பாணிக்கிரஹணஞ்செய்துகொடுத்த தலம். முருகா வென்றுமொழிந்தவரும் ஒருபெண்ணின் கணவன் அதையொழித்துத் தன்பெயர் கூறக்கற்பித்தும்அவள் கேளாமைக்காக அவள்கரத்தைச் சேதிப்ப, அக்கரம் ஸ்ரீமுருகப்பிரானருளால் வளரப்பெற்றதலம்,

முடையவனாகிய ஸ்ரீமுருகக்கடவுளை தலைமைபெற்ற உள்ளத்தோடு நீ விரும்பினையானால், வீடுபேற்றைத் தவறாமல் இப்பொழுதே பெறுவை. அது பெறுதற்கு அவன் யாண்டுறையு மென்னில் திருப்பரங்குன்றமர்ந்துறைதலுமுரியன் அதுவன்றி,

---

### * திருச்சீரலைவாய்.

நூல்தொகுப்பு.

வேழமேற்கொண்டு ஆறுமுகங்களும் தொழில்களிடத்துச்செய்யும்முறைமை

---

* இஃது திருநெல்வேலிக்குத் தெற்கு மூன்றுகாத தூரத்தில் சமுத்திரதீரத்திலுள்ளது. வியாசரால் உபதேசிக்கப்பட்டசுகப்பிரமரிஷி, நாரதரால் உபதேசிக்கப்பட்ட வெள்ளையானை யிவர்கள் பூசித்து அனுக்கிரகம்பெற்ற தலம்.

இஃது கந்தமாதனம், சந்தனசலம், திருச்செந்தி, திருச்செந்தில், திருச்செந்

களைப் பயின்றுநடத்த, அவற்றிற்கேற்ப தோள்கள் ஆங்காங்குவளைந்தும்நிமிர்ந்துமிருக்கப் பன்னிருகையும்முகங்களின் பகுதியிலே படும்படி தொழில்செய்து திருச்செந்தூர் என்னுந் திருப்பதியேற எழுந்தருளுதலும் நிலைபெற்ற குணமாம் அதுவன்றி,

---

தூர் எனும்பெயர்களாலும்வழங்கிவருகின்றது.

தேவர்களிடர்களைப் போக்குவிக்கும்பொருட்டுசூரபன்மன், சிங்கமுகாசுரன் தாருகாசுரன், பாநுகோபன் முதலிய துட்டர்களாகிய அசுரர்களைசம்ஹரித்து வீரவாகுதேவர், வீரகேசரி, வீரமாகேந்திரன், வீரமாகேச்சுரன், வீரபுரந்தரன், வீரராக்கதன், வீரமார்த்தாண்டன், வீராந்தகன், வீரதீரன்முதலிய நவவீரர்களும், பூதவீரர்களும், இலக்கவீரர்களும் படைவீடு கொண்டெழுந்தருளி யிருந்த தலம்.

## *திருவாவினன்குடி.

### நூல்தோதுப்பு.

பலரும்புகழும்படியான திரிமூர்த்திகளும்தலைவராகவேண்டி அதற்குக்குறைபாடுண்டாக்கின பிரமனை பழைய நிலையில் நிறுத்தக்கருதி திருமாலும், உருத்திரரும், தேவேந்திரனும்,ஆதித்தரும், வசுக்களும், மருத்துவரும், பதினெண்கணங்களும்வந்து தன்னைக் காணும்படி திருவாவினன் குடியில் அமர்ந்துறைதலுமுரியன்; அதுவன்றி,

---

## 0 திருவேரகம்.

### நூல்தோதுப்பு.

இருபிறப்பாளர்க்கிராடுங்கால் தோய்க்கப்பட்ட சலிங்கம் உடம்பிலே கிடந்து

---

* இஃதுபழநிமலை அடிவாரத்திலிருக்கின்றது. இலட்சுமிதேவி, காமதேனு, சூரியன், பூமிதேவி, இடிமுதலியோர் பூசித்து பேறுபெற்றதலம்.

0 இஃதுகும்பகோணத்துக்குஉ-நாழிகைவழிதூரத்தி லிருக்கின்றது. இது

புலர உடுத்து, மணமிகுந்த நறுமலரை யேந்தி, கூப்பியகையராய், நவிலப்பாடி, வழிபடு காலமறிந்து தோத்திரங்களைக் கூற, அதற்குப்பெரிதுமகிழ்ந்து திருவே ரசத்து அமர்ந்துறைதலு முரியன்: அதுவன்றி,

---

சாமிமலையெனும் பெயர்பெற்றுவழங்கி வருகிறது.

பிரமதேவன்சிவதரிசனஞ்செய்துவரும் மார்க்கத்தில்ஸ்ரீபாலசுப்பிரமண்ணியக் கடவுளைக்கண்டுவந்தனஞ்செய்யாதேக; பிரமனை யழைத்துப் பிரணவத்திற்குப் பொருள்கேட்க, அவன் விடைகூறாமை பற்றி,சிரசிற்குட்டிச்சிறையிட்டு, தாமே சிருட்டித்தொழிலை நடத்த, சிவபெருமான்,அங்குதோன்றி,பிரமன்சிறையை நீக்கச்சொல்லியும் விடாது பிறகு விடுவித்து சிவபிரானுக்குப் பிரணவத்தை யுபதேசித்த தலம்.

## * குன்றுதோருடல்.

### நூல்தொகுப்பு.

கானவர்குறைவைக்கூத்தாட அவர்மக ளிர் குறவையாடியசைய அவற்றைக்க ண்டு ஸ்ரீமுருகக்கடவுள்தொடுத்த கண் ணியைச்சூடி,சிவந்தஆடையை யுடுத்து அசோகின் குளிர்ந்த தளிர்போன்றகா தைப் பொருந்தி கச்சுக்கட்டிகழலையணி ந்து,

* மலைநாட்டுத் தெய்வம் ஸ்ரீசுப்பிர மணியக்கடவுளாதலால்இங்ஙனங் கூறி னர். இதற்குப்பிரமாணம்.

காடாகு முல்லைக் கழிநெய்தலாகுங்கல்
லாங் குறிஞ்சி
நாடா மருதம் நடலைவெம் பாலையந்
நாட்டுத் தெய்வம்
கோடா கரன்வரு ணன்குகன் இந்திரன்
கூறு துர்க்கை
மாடாயர் மீன்புல்வர் குன்றவர் நாடர்
மறவருமே.

என வருவதாற் காண்க.

வெட்சிமாலைசூடி, குழலையூதி, கொம்பைக்குறித்து, பல்லியங்களை எழுப்பி, மயிலேறி, கோழிக்கொடியையுயர்த்து, நெடுகவளர்ந்து, தொடியணிந்து துகிலையுடுத்து, தங் கையினால் அவர்கள்கையினைத்தழுவி எந்தி, முதற்கைகொடுத்து, பாடுமகளிருடன் மலைகள்தோறுஞ் சென்று, விளையாடுதலும்தனக்குநிலைநின்ற குணமாம்; அதுவன்றி,

---

## * பழமுதிர்சோலை.

### நூல்தொகுப்பு.

ஒவ்வொருவூரில் நடக்கும்திருவிழாக்களிலும், தன்மேல் அன்புடையவர் துதித்தலால்தமது திருவுளம் விரும்பியஇடத்திலும், சன்னதக்காரன்செய்த வெறியாடுகளத்தினும், காட்டினும், சோலையினும், ஆற்றிடைக்குறையினும், ஆறுகளினும், குளங்களினும், வேறுபலவூர்க

* இஃது மதுரைக்கு ஒன்றேகால் காததூரத்திலிருக்கின்றது. இது திருமா

ளினும் முச்சந்திநாற்சந்திஐஞ்சந்திகளினும்,ஊருக்குநடுவேஎல்லாருமிருக்கும் மரத்தடியினும்,அம்பலத்தினும், ஆதீண்டு குற்றியையுடையஇடத்தினும்,உறைதலும்உரியர்.குறமகள்வழிபடநகரிலேஉறைதலும்உரியர். இஃதுயான்கண்டவாறு சொன்னேன். இந்தத்தலங்களிலாயினும் வேறெந்தவிடங்களிலாயினும் அவரை நீ கண்டபோதுமுன்பு தலைமேலே கையைவைத்து வாழ்த்தி,பிறகு அவர்திருவடி யுன்தலையிலுற தண்டனிட்டு,பலவாருகத்துதித்துப் புகழ்ந்து, நின்னடிச்சேரவந்தேனென்று விண்ணப்பஞ் செய்ய நீகோரிய வீடுபேற்றைத் தருபவர் பழமுதிர்சோலைக்குரிமையையுடையவர்.

---

விருஞ்சோலை, சோலைமலை, கள்ளழகர் கோயிலெனும் பெயர்களாலும்வழங்கி வருகிறது.

இந்தத்தலம்நற்கீரர், அருணகிரிநாதர் முதலியஅடியவர்களால்ஸ்ரீசுப்பிரமண்

ணியசுவாமிகளுடைய ஆறுபடைவீடுக ளிலொன்ருகப் பாடல் பெற்றிருக்கின் றது.

இர்தத்தலத்தில், ஒரேட்டத்தில்மூல வரும்அவருக்கிருபுறத்தில்இரண்டு தே விமாரும், நின்றதிருக்கோலமா யெழுந் தருளி யிருக்கின்றனர். இந்தச் சேவை ஸ்ரீசுப்பிரமண்ணியர் தலங்களிலன்றிச் சாதாரணமாகஎந்தவிஷ்ணு க்ஷேத்திர த்திலுமில்லே.

இந்த ஆலயத்திலுள்ளஸ்தம்பங்கள் உன்னதமாயும்,ஒவ்வொன்றில்விசேஷ விசித்திர வேலேகளும், உருவங்களும், சின்னங்களும்முன்னமே அமைப்பெ ற்றிருந்து, இப்போதுஸ்தம்பங்களில்த ளவரிசை முதல்மேல்மட்ட வரையிலு ள்ளஒருஉருவமாவது இன்னதெனநிச்ச யிக்கக் கூடாமலிருக்கும்படி யாதுகார ணத்தாலோஉளியினுல்செதுக்கப்பட்டி ருக்கின்றது. இர்தப்பிரதேசங்களில்இத ரமதஸ்தரான துருக்கர்,கிறிஸ்தவர்முத லியோர் விசேஷசஞ்சாரஞ் செய்திரா

மையால்அவர்களால் இக்குறும்புத்தனங்கள் நேரிட்டிருக்குமென நம்பஇடமில்லை.

இத்தலத்துக்குக்காவற்காரர்வீரவாகுதேவராகச்சொல்லுகின்றனர்வீரவாகுதேவர் ஸ்ரீமுருகவேளது படைத்தலைவராகி, அவராலயத்தைக்காத்தே வருகின்றனர்.

இந்தக் கோயில் முகத்துவாரத்தில் பதினெட்டாம்படி கறுப்பண்ணசுவாமி கோயிலிருக்கின்றது.விஷ்ணுகோயிலுக்கும்,கறுப்பண்ணசுவாமிகோயிலுக்கும் எந்தநாட்டிலும் எந்தச்சமயங்களிலும் சம்பந்தமே யில்லை.

திருப்பதியிலும்,திருமாலிருஞ்சோலையிலும் மூர்த்திகள்விசேடமாகப் பேதப்பட்டிருப்பதால் இவ்விரண்டும் விசேடதலங்களாயினும் குளிர் காய்ச்சலுள்ள பிரதேசங்களாயின வென உலகத்தவர் சொல்லுகின்றனர்.

ஆறுபடைவீடுகளின்சிறப்பு.

முற்றிற்று.

உ

முருகன்றுணை.

# *தோத்திரப்பாக்கள்.

## நேரிசைவெண்பா.

குன்ற மெறிந்தாய் குரைகடலிற்சூர் தடிந்தாய், புன்றலையபூதப்பொருபடையா-யென்று, மிளையா யழகியாயேறூர்ந்தா னேறே, யுளையாயென் னுள்ளத் துறை.

(இ-ள்.) குன்றம் எறிந்தாய்-(கிரௌஞ்சகிரியாகிய) மலையைப் பிளந்தவரே, குரைகடலிற் சூர்தடிந்தாய்-ஒலிக்கின்ற கடலின்மத்தியில்(மாமரஉருவாகிநின்ற) சூரனைச்சங்கரித்தவரே, புன்றலையபூதப்

* இத்தோத்திரப்பாக்கள் பழையஏட்டுப்பிரதிகளிவில்லாமல்புதிதாய் அச்சிட்டிருக்கும் பிரதிகளில்மாத்திரமிருக்கின்றமையால் இவற்றைத் தனியேஅச்சிட்டனம்.

பொருபடையாய்சிறியதலைகளையுடைய யுத்தஞ்செய்கின்றபூதப்படையையுடையவரே, என்றும் இளையாய்-எக்காலத்தும் இளமைப்பருவத்தையுடையவரே அழகியாய்-அழகையுடையவரே, ஏறு ஊர்ந்தான் ஏறே-இடபவாகனமேறும் (பரமசிவனுடைய)புத்திரரேஉலையாய் (உலையாய்) அழியாதவரே, என்உள்ளத்துஉறை-என்னுடைய இருதயத்தில் வீற்றிருப்பீராக. எ-று. (க)

குன்றமெறிந்ததுவுங் குன்றப்போர் செய்ததுவு, மன்றங் கமரரிடர் தீர்த்ததுவு-மின்றென்னைக், கைவிடா நின்றதுவுங் கற்பொதும்பிற் காத்ததுவு, மெய்விடா வீரன்கை வேல்.

(இ-ள்.) * மெய்விடாவீரன்கைவேல் என்றும் சிரஞ்சீவியாயிருக்கும் வீரனுடைய (ஸ்ரீமுருகக்கடவுளுடைய) கையி

* மெய்-உண்மைநெறியெனினுமாம்.

லுள்ளவேலாயுதத்தினால்தான்குன்றம் எறிந்ததுவும் - (கிரௌஞ்சகிரியாகிய) மலையைப் பிளந்ததும், குன்ற போர் செய்ததுவும்-பகைவர்மாளயுத்தஞ்செய் ததுவும்,அன்று அங்கு அமரர் இடர்தீர்த் ததுவும்முற்காலத்தில்வீரமாமயேந்திர புரியில் தேவர்களுக்குற்ற துன்பத்தை நீக்கினதும், இன்று என்னை கைவிடா நின்றதுவும்-இக்காலத்தில்என்னைக் கை சோரவிடாமல்நிலைபெற்றிருப்பதும்கல் பொதும்பில் காத்ததுவும் - கல்குகையி லிருந்து காத்ததுவும் ஆகும். எ-று. (௨)

வீரவே ளுரைவேல்விண்ணோர்சிறை மீட்ட, தீரவேல்செவ்வேடிருக்கைவேல் வாரி, குளித்தவேல் கொற்றவேல் சூர் மார்புங் குன்றுந், துளைத்தவே லுண்டே துணை.

(இ-ள்.) செவ்வேள் திருக்கைவேல்-ஸ்ரீமுருகக்கடவுளுடைய மேன்மைபொருந்திய கையிலிருக்கும்வேல். வீரவேல்

வீரத்தன்மைபொருந்தியவேல், தாரை வேல்- கூர்மைபொருந்தியவேல், விண்ணோர்சிறைமீட்ட தீரவேல்-தேவர்கள் சிறையைமீட்ட வலிமையையுடைய வேல், வாரிகுளித்தவேல் - சமுத்திரத்தில்படிந்தவேல், கொற்றவேல்-வெற்றி பொருந்தியவேல், சூர்மார்புங்குன்றும் துளைத்தவேல்-சூரனுடையமார்பையும் (கிரௌஞ்சகிரியையும்) பிளந்தவேல், உண்டேதுணை- நமக்குத் துணையாகவுண்டு. எ-று. (௩)

இன்ன மொருகா லெனதிடும்பைக் குன்றுக்குங், கொன்ன வில்வேற் சூர் தடிந்த கொற்றவா-முன்னம், பனிவேய் நெடுங்குன்றம்பட்டுருவத்தொட்ட, தனி வேலை வாங்கத் தகும்.

(இ-ள்.) கொல்நவில்வேல்சூர்தடிந்த கொற்றவா - (பகைவரைக்) கொல்லக்கற்ற வேலாயுதத்தால்சூரனைச்சங்கரித்த தலைவனே, முன்னம்-பூர்வத்தில், பனி

வேய்நெடுங்குன்றம் - பனியால் அலங்கரிக்கப்பட்ட(கிரௌஞ்சகிரியென்னும்) பெரியமலையில், பட்டுருவ - பட்டுருவும்படி, தொட்ட-பிரயோகித்த, தனிவேலை ஒப்பற்றவேலாயுதத்தை, இன்னம் ஒருகால்- இனியும்ஒருவிசை, எனது இடும்பைகுன்றுக்கும்-என்னுடைய ஆபத்தாகியகுன்றின்பேரிலும், வாங்கத்தகும்-செலுத்தத்தகுதியாயிருக்கும். எ-று (ச)

உன்னை யொழியவொருவரையுநம்பு கிலேன், பின்னைபொருவரையான்பின் செல்வேன்-பன்னிருகைக், கோலப்பா வானோர் கொடியவினை தீர்த்தருளும், வேலப்பா செந்திவாழ் வே.

(இ-ள்.) பன்னிருகை கோலப்பா-பன்னிரண்டுகைகளிலும் ஆயுதங்களைத் தரித்தவரே, வானோர் கொடியவினை தீர்த்து அருளும் வேலப்பா - தேவர்களுக்குற்ற கொடிய பொல்லாங்குகளை நீக்கி யிரட்சித்த வேலாயுதக்கடவுளே, செந்தி

வாழ்வே - திருச்செந்தூரென்னும் பதியில் வாழும் செல்வமே, உன்னை ஒழிய-உன்னைத்தவிர, ஒருவரையு ம்நம்புகிலேன்- (வேறு) ஒரு (தெய்வத்தையும்) விரும்பேன், பின்னை ஒருவரையான் பின் செல்லேன்-வேறு ஒருவரையும்தொடர்ந்துபோகேன். எ-று. (ரு)

அஞ்சுமுகந்தோன்றி லாறு முகந்தோன்றும், வெஞ்சமரி லஞ்சலெனவேலே-ன்று-நெஞ்சி, லொருகா லினைக்கி லிருகாலுந் தோன்று, முருகாவென் றோதுவார் முன்.

(இ-ள்.) முருகாவென்றோதுவார்முன் முருகாவென்று(உள்ளன்புடன்) சொல்கிறவரிடத்தில், அஞ்சும்முகம்தோன்றில்-பயத்தினால் முகவாட்டம்தோன்றினால் (அவர்களை ஆதரிக்க,) ஆறுமுகம் தோன்றும்-ஆறுமுகங்களும் வெளிப்படும், வெஞ்சமரில்-கடுமையாகிய போரில்(அச்சம் உண்டாயின்,)அஞ்சலென-

பயப்படாதே என்று, வேல்தோன்றும்-வேலாயுதம் காணப்படும், நெஞ்சில்-(உருக்கத்தோடு) மனதில், ஒருகால்நினைக்கில்-ஒருதரம் நினைத்தால், இருகாலும் தோன்றும்-(சகலமானபேறும் வரையாதுகொடுக்கும்) இரண்டு திருவடிகளும் தரிசன்மாகும். எ-று. (சு)

முருகனே செந்தி முதல்வனே மாயோன், மருகனே யீசன் மகனே-யொரு கைமுகன், றம்பியே நின்னுடையதண்டைக்கா லெப்பொழுது, நம்பியே கை தொழுவே னான்.

(இ-ள்.) முருகனே-முருகனே, செந்தி முதல்வனே - திருச்செந்தூரென்னும் பதிக்குத்தலைவனே, மாயோன் மருகனே-மகாவிஷ்ணுவுக்கு மருமகனே, ஈசன் மகனே-பரமசிவன்புத்திரனே, ஒரு கைமுகன் தம்பியே- ஒப்பற்றயானைத்துதிக்கைபெற்ற முகத்தையுடைய விநாயகருக்கிளையவனே, நான்-நான், நின்னு

டைய உன்னுடைய, தண்டைக்கால்-தண்டையையணிந்ததிருவடிகளை, எப்பொழுது-எந்தகாலத்தில், நம்பியே கைதொழுவேன்-விரும்பி (உள்ளன்புடன்) கையினல் தொழுவேன். எ-று. (எ)

காக்கக் கடவியநீ காவா திருந்தக்கா
லார்க்குப் பரமா மறுமுகவா-பூக்குங்
கடம்பா முருகா கதிர்வேலா நல்ல
விடங்கா ணிரங்கா யினி.

(இ-ள்.) அறுமுகவா-ஆறுதிருமுகத்தையுடையவனே, பூக்குங்கடம்பா-மலரும்கடப்பமாலையைத்தரித்தவனே, முருகா-முருகனே, கதிர்வேலா-ஒளியை வீசுகின்ற வேலாயுதத்தை யுடையவனே, காக்கக்கடவியநீ - அடியார்களை யாதரித்து) காப்பாற்றும்படியான உரிமையையுடைய தேவரீர், காவாதிருந்தக்கால்-எமக்கென்னென்று பராமுகமாயிருந்தால், ஆர்க்குப்பரமாம்-அதுயாருக்குப் பொறுப்பாகும், (தேவரீருக்கன்றி வே

னொருவருக்கிலை ஆதலால்) நல்ல இடம் காண் - (இது) நல்லசமயமானதினுல், இரங்காய் இனி-இப்பொழுது(என்மீது) தயைபுரிவாய். எ-று. (அ)

பரங்குன்றிற்பன்னிருகைக்கோமான்
றன்பாதங், கரங்கூப்பிக் கண்குளிரக்
கண்டு-சுருங்காம, லாசையானெஞ்சே
யணிமுருகாற் றுப்படையைப், பூசை
யாக் கொண்டே புகல்.

(இ-ள்.)நெஞ்சே-ஓமனமே,பரங்குன்றில் - திருப்பரங்குன்றத்தில் (வீற்றிருக்கும்) பன்னிருகைக்கோமான்தன்பாதம் பன்னிரண்டு கைகளையுடையபெருமையிற்சிறந்தமுருகக்கடவுளுடையதிருவடிகளை, கரங்கூப்பி - கையால்தொழுது, கண்குளிரக்கண்டு - கண்கள் பூரணசந்தோஷப்படும்படியாகத் தரிசித்து,சுருங்காமல் ஆசையால்- கெடுதலில்லாதவிருப்பத்துடனே, அணிமுருகாற்றுப் படையை- அணிவகுத்திருக்கும் திருமுருகாற்

றுப் படையென்னும் நூலே, பூசையாக் கொண்டே புகல்-ஆ ரா த னை யா க க் கொண்டு சொல்லக்கடவை. எ-று. (கூ)

நக்கீரர்தாமுரைத்தநன் முருகாற்றுப் படையைத், தற்கோலநாடோறுஞ்சாற் றினல் - முற்கோல, மாமுருகன் வந்து மனக்கவலே தீர்த்தருளித், தானினைத்த வெல்லாந் தரும்.

(இ-ள்.) நக்கீரர் தாமுரைத்த-(தெய் வத்தன்மைபொருந்திய) நக்கீரர் அருளி ச்செய்த,நல்முருகாற்றுப்படையை-நன் மையபக்கும் திருமுருகாற்றுப்படை யென்னும், தற்கோலம்-இந்தசெய்யுள் தொடையைத் தக்கோலத்துடன். நா டோறும் சாற்றினல்-ஒருவன் பிரதி தினமும் பாராயணஞ்செய்தால், முற் கோலம்-பழமையாகிய அழகினை வாய்ந் த,மாமுருகன்-மாட்சிமைபெற்றமுருக க்கடவுள், வந்து-(அவன்முன்)தோன்றி,

மனக்கவலை தீர்த்தருளி - (அவனுக்குற்ற)மனோவிசார முழுவதும் கிருபை கொண்டு நீக்கி, தானினைத்த எல்லாம் தரும்-அவன் கோரிய எல்லாவற்றையும் தருவர். எ-று. (௧௦)

## தோத்திரப்பாக்கள் பதவுரை முற்றிற்று.

உ

# ஸ்ரீசுப்பிரமணியர் நாமங்கள்

## வருமாறு.

அரிமருகன் வாகுலே யன்வள்ளி மணவாளன், அரன்மகன் தெய்வ யானைக், கன்பனறு மீன்காத லன்தாரு காரிவேள், அறுமுகன் மஞ்ஞை யூர்தி, கரிமுதற் கிளவல்கலையுணர்புலவன்வே லிறைவன், காங்கேயன் குன்றெ றிந் தோன், கார்த்திகே யன்குகன் தேவசே னைபதி, கந்தனு சான்க டம்பன், சரவ ணப வன்சுப்ர மணியன்சு ரேசன்சேய். தாருகற் செற்றோன் சிவ, சங்கரன் தே சிகன் சூர்ப்பகைவன் பாவகி, சண்மு கன் சிலம்பன் செட்டி, முருகுசே வற் கொடியன் குழகன்சேந்தன்குமரன், முன்னான்கு தோளன் செவ்வேள், முக் கண்ணி மைந்தன்வி சாகன்மலை வேந் தனடி, முழுமன துடன்து திப்பாம்.

---

# புத்தக விளம்பரம்.

| | | | |
|---|---|---|---|
| ஜீவரக்ஷாமிர்தம் | 4 | 0 | 0 |
| வள்ளுவர் சாஸ்திரம்-20 | 1 | 8 | 0 |
| திருமந்திரம் மூவாயிரம் | 1 | 8 | 0 |
| ஞானவாசிட்டவசனம் | 1 | 8 | 0 |
| சேதுபுராண வசனம் | 2 | 0 | 0 |
| தஞ்சை பகவற்கீதைவசனம் | 1 | 4 | 0 |
| வாசுதேவமனனம் | 1 | 0 | 0 |
| சின்னசாமி தாஸ் கீர்த்தனை | 1 | 0 | 0 |
| ஞானப்பிரகாசதீபிகை | 1 | 0 | 0 |
| கந்தபுராணச் சுருக்கம் | 0 | 12 | 0 |
| சானந்தகணேசர்புராணம் | 0 | 12 | 0 |
| சிவஸ்தலமான்மியச்சுருக்கம் | 0 | 12 | 0 |
| தத்துவராயர் பாடுதுறை | 0 | 12 | 0 |
| தாயுமானசுவாமிகள்பாடல் | 0 | 12 | 0 |
| ஸ்ரீகுமாரதேவர்சாத்திரம் 16-0 | 10 | 0 | |

வி. பி. போஸ்டில் அனுப்பப்படும்.

கோ. லோகநாதமுதலியார்.

மநோன்மணிவிலாசம்பிரஸ், நெ-29,

வைத்தியநாதமுதலி வீதி, சென்னை.